தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு

# மெட்ரோ ரயில்கள் இரவு 11 வரை இயக்கப்படும்

■ சென்னை

தீபாவளியையொட்டி மெட்ரோ ரயில்கள் வரும் 2, 3-ம் தேதி ஒகளில் இரவு 11 மணி வரையில் இயக்கப்படும். மேலும், கூடுதலாக மெட்ரோ ரயில்களும் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் தற்போது விமான நிலையம் - சென்ட்ரல், விமான நிலையம் - டிஎம்எஸ் இடையே மெட்ரோ ரயில்கள் தினமும் இயக்கப்பட்டு வருகின்றன. 15 நிமிடங்கள் இடைவெளியில் மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. வழக்கமாக அலுவலக நாட்களில் காலை 6 மணிக்கும், ஞாயிறுகளில் காலை 8 மணிக்கும் மெட்ரோ ரயில்சேவை தொடங்கி இரவு 10 மணி வரை மட்டுமே இயக்கப்படும்.

இதற்கிடையே, தீபாவளியை யொட்டி சென்னையில் இருந்து லட்சக்கணக்கான மக்கள் சொந்த ஊருக்குப் புறப்படுவார்கள். எனவே, மக்களின் வசதியாக வரும் 2, 3-ம் தேதிகளில் இரவு 11 மணி வரையில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.

மேலும், பயணிகளின் தேவைக்கு ஏற்றவாறு கூடுதலாக ரயில்கள் இயக்கப்படும் என மெட்ரோ ரயில் நிறுவனம் அறிவித்துள்ளது.